பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
23 11 2024 **SATURDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பல்வேறு நாடுகள் இணைய விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- கடந்த பத்தாண்டுகளில் நாடுமுழுவதும் உலகத் தரம் வாய்ந்த நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. **Ravneet Singh Bittu** கூறியுள்ளார்.
- தமிழகத்தின் நிதி நெருக்கடி குறித்து நாடாளுமன்றத்தில் திமுக உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டும் என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
- நியாயவிலைக் கடைகளில் துவரம் பருப்பு போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மாநில உணவுத் துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.
- சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று தென்கொரிய இணையை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா உள்ளதால், ஒவ்வொரு நாடும் இந்தியாவுடன் இந்த வளர்ச்சியில் இணைய விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜெர்மனியின் **Stuttgart-**ல் உள்ள ஊடக குழுமத்தின் நிகழ்ச்சியில் நேற்று காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், கடந்த பத்தாண்டுகளாக தமது அரசு செயல்படுத்தி வரும் சீர்திருத்தம், செயல்திறன் மற்றும் மாற்றம் என்ற தாரக மந்திரத்தின் காரணமாக, இந்தியாவின் முக்கியத்துவத்தை உலகம் தற்போது ஒப்புக்கொண்டுள்ளதாக கூறினார்.

இந்தியாவில் கவனம் செலுத்துங்கள் என்ற ஜெர்மனியின் ஆவணம் அதற்கு ஒரு சிறந்த சான்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகில் இந்தியா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் அந்த ஆவணம் திகழ்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஒவ்வொருதுறைக்கும் இந்தியா புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்தி, 21ஆம் நூற்றாண்டில் விரைவான வளர்ச்சியை எட்ட தன்னை தயார்படுத்திக் கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில் தமது அரசு சில கட்டுப்பாடுகளை முடிவுக்கு கொண்டு வந்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சித் திட்டங்களுக்கு எளிதாக முதலீடுகள் கிடைக்கும் வகையில், வங்கித் துறையை இந்தியா வலுப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு, வலுவான அடித்தளமிடப்பட்டுள்ளது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சீரிய முயற்சியால், நாடுமுழுவதும் உலகத் தரம் வாய்ந்த நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே இணையமைச்சர் திரு. **Ravneet Singh Bittu** தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களுடன் நேற்று கலந்துரையாடிய அவர், புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கி வருவதாக கூறினார்.

மருத்துவர்கள் தங்களது திறன்களை வளர்த்துக் கொண்டு, நாட்டின் வளர்ச்சிக்கு அதனை பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

**>>>>><<<<<**

தமிழகத்தின் நிதி நெருக்கடி மற்றும் மாநில உரிமைகள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டும் என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், மத்திய அரசின் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாடு நிதியை திமுக உறுப்பினர்கள் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றிபெற நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக பங்களிக்க வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

அரசு கலைக்கல்லூரி மாணவர் விடுதிகளில் தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் கூறியுள்ளார்.

கோவை அரசு கலைக்கல்லூரி மாணவர் விடுதியில் நேற்று ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், அங்குள்ள வசதிகள் குறித்தும், மாணவர்களுக்கான தேவைகள் குறித்தும் அவர்களிடம் கேட்டறிந்தார்.

அப்போது, பெரும்பாலான மாணவர்கள் தரமான உணவு, சுகாதாரமான கழிப்பிட வசதி செய்துதரப்பட வேண்டும் என்று அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கைகளை மாநில அரசு நிறைவேற்றித் தரும் என்று பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கோவி. செழியன் கூறினார்.

>>>>><<<<<

மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளுக்கு அத்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட எல்லைப்பட்டி, நீலமலைக்கோட்டை, புதுச்சத்திரம் உள்ளிட்ட ஆறு ஊராட்சிகளில் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதலமைச்சரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 20 ஆயிரம் கிலோமீட்டர் சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கலைஞர் இல்லம் திட்டத்தின் கீழ், ஆறாயிரத்து 700 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினருக்கான தொகுப்பு வீடுகள், பழுதுபார்க்க முடியாத நிலையில் இருந்தால், புதிதாக வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

நியாயவிலைக் கடைகளில் துவரம் பருப்பு போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மாநில உணவுத் துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் நவம்பர் மாதத்திற்காக 2 கோடியே 3 லட்சத்து 84 ஆயிரத்து 122 கிலோ துவரம்பருப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நேற்றுவரை 1 கோடியே 62 லட்சத்து 83 ஆயிரத்து 486 கிலோ வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மாநிலத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் 68 லட்சத்து 44 ஆயிரத்து 719 கிலோ துவரம் பருப்பு கையிருப்பில் உள்ளதாகவும், நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் 66 லட்சத்து 91 ஆயிரம் கிலோ துவரம் பருப்பு உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

வைகை ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக, மத்திய – மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், மத்திய நீர்வளத்துறை, தமிழக அரசின் பொதுப்பணித்துறை, மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், ராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்ட ஆட்சியர்கள் பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே நேற்றிரவு பேருந்தும், லாரியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 3 பேர் உயிரிழந்தனர், 18 பேர் காயமடைந்தனர்.

ஆத்தூரிலிருந்து ராசிபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தின் டயர் வெடித்ததால், கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, எதிரே வந்த லாரி மீது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த 18 பேர் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்து நடந்த இடத்தை மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன், மாவட்ட ஆட்சியர் திருமதி. உமா ஆகியோர் பார்வையிட்டு, உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

>>>>><<<<<

வங்கக்கடலில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த இரு தினங்களில் தெற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு அந்தமான் கடல்பகுதியிலிருந்து மன்னார்வளைகுடா வரை, வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுவதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் மேலும் கூறியுள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிறப்பித்துள்ள கைது வாரண்டை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

>>>>><<<<<

சிந்து மாகாணத்தில் உள்ள சீக்கியர்களின் மதகுருக்களில் ஒருவரான **Shadaram Sahib**–ன் 316வது ஆண்டுவிழாவில் கலந்து கொள்ள 87 இந்தியர்களுக்கு பாகிஸ்தான் விசா வழங்கியுள்ளது.

>>>>><<<<<

தில்லியில் காற்று மாசுவை கட்டுப்படுத்த சில வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அமலாக்கப்படுவதை அம்மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கோபால் ராய், நகர எல்லையில் நேற்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் உள்ள பூஞ்ச் பகுதி இந்தியாவுடன் இணைக்கப்பட்டு 77 ஆண்டுகள் ஆனதை ஒட்டி, நேற்று அங்கு நடைபெற்ற விழாவில் முன்னாள் ராணுவத்தினர்களை ராணுவம் கௌரவப்படுத்தியது.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு சீல் வைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. இளம்பகவத் எச்சரித்துள்ளார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில், விவசாயிகளின் நலன் காக்கும் கூட்டம், இம்மாதம் 29ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சியர் திரு. பிரபுசங்கர் அறிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பாச்சல் ஊராட்சியில் அமைந்துள்ள சிறப்பு தத்தெடுப்பு மையத்தை மாவட்ட ஆட்சியர் திரு. தர்பகராஜ் நேற்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**>>>>><<<<<**

திருச்சி, ஜீயர்புரம் அருகே அந்தநல்லூர் காவிரி ஆற்றங்கரையில், மேலும் ஒரு மினி ராக்கெட் லாஞ்சரை கைப்பற்றி காவல்துறை விசாரணை நடத்தி வருகின்றனர்

**>>>>><<<<<**

விளையாட்டுச் செய்திகள்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இன்று பங்கேற்கிறது.

சீனாவின் **Shenzhen-**ல் நடைபெறும் இப்போட்டியில் இந்த இணை தென்கொரியாவின் **Jin Yong – Seo Seung** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

கோவாவில் நடைபெறும் ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் பஞ்சாப் அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை எதிர்கொள்கிறது.

இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றொரு ஆட்டத்தில் மோகன் பஹான் அணி - ஜாம்செட்பூர் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

நொய்டாவில் நேற்று நடைபெற்ற புரோ கபடி லீக் போட்டியில் உத்தரபிரதேச அணி 40-24 என்ற புள்ளிக்கணக்கில் தமிழக அணியை வென்றது.

>>>>><<<<<